DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**O.S. No. 77/2025**

Deposition of Witness : P.W. 2

| | |
|---|---|
| Name - **திரு.ராமராஜ்** | Father's Name - **திரு.** |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of 27.11.2025.
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை –**

1. நான் வாதி தரப்பு 2 வது சாட்சி. மார்ச் மாதம் 2024 ஆம் வருடம் 29 ஆம் தேதி. எனக்கு வாதி சிலம்பரசன் எனது தோட்டத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்தது தொடர்பாக அவர் எனக்கு பழக்கம். அதிலிருந்து நானும், சிலம்பரசனும் கொடுக்கல், வாங்கல் செய்து வந்தோம். 28–ம் தேதி மார்ச் மாதம் 2024 ஆம் தேதியன்று எனது வீட்டு வழியாக காலையில் சிலம்பரசன் வாக்கிங் வந்தபோது செல்வராஜ் என்பவருக்கு ரூ.20 லட்சம் கடன் கொடுக்க இருப்பதாக என்னிடம் தெரிவித்தார்.

2. அவரது வீட்டிற்கு காலை 10 மணிக்கு வருமாறு என்னை கேட்டுக் கொண்டார். நான் அவர் வீட்டிற்கு சுமார் 11.00 மணிக்கு காலையில் சென்று இருந்தேன். அப்பொழுது சிலம்பரசன் வீட்டில் சரண், உதயகுமார், சிலம்பரசன், சிலம்பரசனின் மனைவி மற்றும் பணம் வாங்கிய பிரதிவாதி செல்வராஜ் அவருடன் இரண்டு நபர்கள் வந்திருந்தார்கள். ஏன் பதியாமல் பணம் கொடுக்கிறீர்கள் என்று நான் சிலம்பரசனிடம் கேட்டேன் அதற்கு சிலம்பரசன் தனக்கு செல்வராஜ் மிகவும் நெருங்கிய பழக்கம் என்றும், அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் பதியாமல் பணம் கொடுப்பதாக தெரிவித்தார். அன்றைய தினம் பத்திர அலுவலகம் லீவு என்பதால் புரோநோட் எழுதி கடன் கொடுப்பதாக

சிலம்பரசன் சொன்னதன் பெயரில் நான் சரி என்ன சொன்னேன். சரணிடம் புரோநோட்டை வாங்கி வரச் சொல்லி சரண் அந்த புரோநோட்டை எழுதினார்.

3. சிலம்பரசன் மனைவி வீட்டில் இருந்து பணத்தை எடுத்து வந்து சிலம்பரசனிடம் கொடுத்தார். செல்வராஜ்யிடம் சிலம்பரசன் அந்த பணத்தை கொடுத்தார். மொத்தம் கட்டுகளை மட்டும் எண்ணி பையில் வைத்துக் கொண்டார். புரோநோட்டில் செல்வராஜ் கையெழுத்து போட்டார், அதன் பிறகு நான் சாட்சியாக கையெழுத்து போட்டேன். உதயகுமார் என்ற மற்றொரு நபர் அந்த புரோநோட்டில் 2வது சாட்சியாக கையெழுத்து போட்டார். புரோநோட் எழுதிய சரண் என்பவர் அதில் கையெழுத்து போட்டார்.

4. பணம் வாங்கிய பிறகு கடைசியாக கையெழுத்து போடப்பட்டது. அதன் பிறகு நான் கிளம்பி சென்று விட்டேன். ஏற்கனவே செல்வராஜுக்கும், சிலம்பரசனுக்கும் கொடுக்கல் வாங்கல் இருக்கும் பட்சத்தில் ஏன் மீண்டும் கடன் கொடுக்கிறீர்கள் என்று நான் சிலம்பரசனிடம் கேட்க தனது வீட்டை பதிந்து தருவதாக செல்வராஜ் சொன்னார் என்ற தகவலை சொன்னதன் பேரில் கடன் கொடுக்க சிலம்பரசன் சம்மதித்து, பணம் கொடுத்தார். அதன்பிறகு அவர்களுக்கிடையே பேசிக் கொண்டிருந்தார்கள். நான் கிளம்பி வந்து விட்டேன். சிலம்பரசன் அந்தப் பகுதியில் சொட்டுநீர் பாசனம் அரசாங்கத்தில் மானியம் பெற்று எல்லோருக்கும் சொட்டுநீர் பாசனம் அமைத்து தருவார். மானியம் எல்லோருக்கும் வருவது போல் அவர் சொட்டுநீர் பாசனம் அமைத்து நல்ல முறையில் தொழில் செய்து வந்தார். செல்வராஜ் விவசாயம் தான் செய்து வருகிறார்.

**<u>வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2025.11.27 15:54:47 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தேனி.**